பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

28 12 2024 **SATURDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

2. மொபைல் செயலிகள் மூலம் வாடகை வாகனங்களுக்கு மாறுபட்ட கட்டணங்கள் வசூலிப்பது தொடர்பான புகார்கள் குறித்து விசாரிக்குமாறு நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்திற்கு, மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

3. சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக உண்மை கண்டறியும் குழுவை, தேசிய மகளிர் ஆணையம் அமைத்துள்ளது.

4. நாட்டின் நலனை முன்நிறுத்தி நீதித்துறை நடவடிக்கைகள் இருந்தால்தான் சட்டத்தின் மாண்புகள் பாதுகாக்கப்படும் என்று உச்சநீதிமன்ற நீதிபதி திரு கே வி விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

5. அஹமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaishnav Adkar- Pooja Ingale** இணை பட்டம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<<>>>>>>

வாடகை வாகனங்களுக்கு மொபைல் செயலிகள் மூலம் மாறுபட்ட கட்டணங்கள் வசூலிப்பது தொடர்பான புகார்கள் குறித்து விசாரிக்குமாறு நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்திற்கு, மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது

இதுதொடர்பாக, மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஆன்ட்ராய்டு மற்றும் ஆப்பிள் மொபைல் போன் செயலிகள் வாயிலாக ஒரே விதமான பயணங்களுக்கு

பல்வேறு கட்டணங்கள் வசூலிக்கப்படுவதாக புகார் வந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, விரிவான விசாரணை மேற்கொண்டு விரைவில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேபோன்று, உணவு விநியோக செயலிகள், ஆன்லைன் டிக்கெட் செயலிகள் உள்ளிட்ட பல்வேறு செயலிகளின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்யுமாறு நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நுகர்வோரிடமிருந்து சட்டத்திற்கு புறம்பாக கட்டணம் வசூல் செய்யப்படுவதை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது என்று திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக உண்மை கண்டறியும் குழுவை, தேசிய மகளிர் ஆணையம் அமைத்துள்ளது.

இதுதொடர்பாக, அந்த ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இரண்டு உறுப்பினர்களை கொண்ட இக்குழு, இச்சம்பவத்திற்கான சூழ்நிலை

குறித்தும் குற்றம் சாட்டப்பட்டவர் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்ய உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பாதிக்கப்பட்ட மாணவி மற்றும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் இந்தக்குழு விசாரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினர் திருமதி மம்தா குமாரி, மகாராஷ்ட்ரா மாநில முன்னாள் காவல்துறை தலைமை இயக்குனர் திரு பிரவீன் தீக்ஷித் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

**<<<<<<<>>>>>>**

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின் இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

இன்று காலை பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது உடல், **Nigambodh ghat** பகுதிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இதன் பின்னர், இறுதிச் சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து, துப்பாக்கி குண்டுகள் முழங்க அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

<<<<<<<>>>>>>

சுதந்திரப்போராட்ட மாவீரர் பொல்லானின் தியாகங்கள் போற்றுதலுக்குரியவை என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

மாவீரர் பொல்லான் பிறந்த தினத்தையொட்டி இன்று அவர் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், ஆங்கிலேயருக்கு எதிரான போரில் தமிழகத்தின் காவிரிக்கரை, அரச்சலூர், ஓடாநிலை பகுதிகளில் தீரன் சின்னமலை தலைமையிலான படைப்பிரிவு வெற்றிபெற முக்கிய காரணமாக திகழ்ந்தவர் மாவீரர் பொல்லான் என்று குறிப்பிட்டுள்ளார்.

படை வீரர்களுக்கான போர் முறையை வகுப்பதில் அவர் தனிச்சிறப்புடன் செயல்பட்டவர் என்று திரு எல். முருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.

<<<<<<<>>>>>>

2026-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ள தயாராக உள்ளதாக பாமக தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில் நடைபெற்ற அக்கட்சியின் சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில் 30 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை கட்டாயமாக்கும் வகையில் அரசியலமைப்புச்சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்று அக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழகத்தில் மின்சார கட்டணத்தை குறைப்பது, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூடுதல் இழப்பீடு வழங்குவது, அரசு ஊழியர்களுக்கான் பழைய ஓய்வூதியத்திட்டத்தை செயல்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

<<<<<<<>>>>>>>

நாட்டின் நலனை முன்நிறுத்தி நீதித்துறை நடவடிக்கைகள் இருந்தால்தான் சட்டத்தின் மாண்புகள் பாதுகாக்கப்படும் என்று உச்சநீதிமன்ற நீதிபதி திரு கே வி விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

சேலம் மத்திய சட்ட கல்லூரி பட்டமளிப்பு விழாவில் 390 மாணவ, மாணவியருக்கு பட்டங்களை வழங்கி அவர் உரையாற்றினார்.

செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பங்கள் வேகமாக வளர்ந்துவரும் நிலையில், நீதிக்காக நீதிமன்றங்களை அணுகும் மக்களுக்கு

உரிய சட்ட விதிகளின்படி விசாரித்து தீர்ப்பு வழங்க மனிதர்களால் மட்டுமே முடியும் என்று தெரிவித்தார்.

இளம் வழக்கறிஞர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தி சாமானிய மக்களுக்கு நீதியை பெற்றுத்தர முன்வர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டர்ர.

சட்டப்பிரிவுகளில் புதிய நிபுணத்துவம் பெற, அதுசார்ந்த கட்டுரைகளை எழுதுவதில் இளைஞர்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என்று நீதிபதி திரு விஸ்வநாதன் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் வனத்துறையினரால் மயக்க ஊசி செலுத்தி பிடிக்கப்பட்ட காட்டு யானையை வனப்பகுதியில் விடும் பணி நடைபெற்று வருகிறது.

வனத்துறையினர் இப்பணியினை மேற்கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் – சரவணன் 52 செகண்ட்ஸ்)

<<<<<<<>>>>>>

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்காக இன்று முதல் ஏழு நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - மூர்த்தி – 44 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் கடந்த சில தினங்களாக பெய்த கனமழை காரணமாக தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதையடுத்து சுற்றுலாப்பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், 17 நாட்களுக்கு பிறகு சுற்றுலாப்பயணிகளுக்கு அருவியில் குளிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - தென்காசி செந்தில் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூர் மாவட்டத்தில் ஊராட்சித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 11 நீர்நிலைகளில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யும் திட்டத்தின்கீழ், ஒரு லட்சத்து 40 ஆயிரம் மீன் குஞ்சுளை ஏரியில் விடும் நிகழ்வை ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் தொடங்கிவைத்தார்.

<<<<<<<>>>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கைவினைக்கலைகள் மற்றும் கலைத்தொழில்கள் செய்வோர் கடனுதவி பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதிகளில் உள்ள பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவது குறித்து ஆட்சியர் திருமதி லஷ்மி பிரியா ஆய்வு செய்தார்.

<<<<<<<>>>>>>

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் 100 கிலோ தடை செய்யப்பட்ட போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதுதொடர்பாக இரண்டு பேர கைது செய்யப்பட்டுள்ளனர்.

**<<<<<<<>>>>>>**

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் காவல்துறையினருக்கான சிறப்பு மருத்துவ முகாம் இன்று நடைபெற்றது. இதில் 300-க்கும் மேற்பட்ட காவல்துறையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மருத்துவ பரிசோதனை செய்துகொண்டனர்.

**<<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

அஹமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaishnav Adkar- Pooja Ingale** இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 6-3, 2-6, 12-10 என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Honoka – Anri Nagata** இணையை வென்றது.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரவிலும் இந்தியாவின் **Vaishnavi Adkar** பட்டம் வென்றார்.

**<<<<<<<>>>>>>**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மூன்றாம் நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் 9 விக்கெட் இழப்பிற்கு 358 ரன் எடுத்துள்ளது.

**<<<<<<<END>>>>>>**